1969 மார்ச் 11]

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, அந்தப் பத்திரிகைகளின் விற்பனை, தரம் போன்றவைகளைப் பார்த்து விளம்பரம் அளிக்கப்படுகிறது.

தென்னையிலிருந்து பதநீர் இறக்கல்

*269 வினா.—திரு. கொளத்தூர் கோதண்டம்
திரு. என். எஸ். வி.சித்தன் } மாண்புமிகு முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) தென்னையிலிருந்து பதநீர் இறக்குகின்ற அனுமதி எந்தெந்த மாவட்டங்களில் அமுலிலிருக்கின்றது ?

(இ) செங்கற்பட்டு, சேலம் ஆகிய மாவட்டங்களில் உடனடியாக அமலாக்கின்ற உத்தேசம் உண்டா ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : (அ) தமிழ்நாடு முழுவதும் வெல்லம் தயாரிப்பதற்காக மட்டும் தென்னை மரத்திலிருந்து பதநீர் இறக்க அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

(இ) இவ் வினா எழவில்லை.

திரு. கொளத்தூர் கோதண்டம் : பேரவைத் தலைவர் அவர்களே, தென்னையிலிருந்து பதனீர் இறக்கப்பட்டு, வெல்லம் மட்டும் காய்ச்சப்படுகிறது. இப்படி பதனீராக விற்றால் தான் மரம் ஏறும் தொழிலாளர்களுக்கு வேலை கிடைக்கிறது என்பது அரசாங்கத்திற்குத் தெரியுமா ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, தென்னை மரத்திலிருந்து பதனீராக இறக்கப்பட மாட்டாது. அப்படிச் செய்தால் அது வேறு காரியங்களுக்குப் பதப்படுத்தப்பட்ட நீராக அமையும்.

திரு. கே. விநாயகம் : பேரவைத் தலைவர் அவர்களே, பனைமரத்திலிருந்து இறக்குகிற பதனீரையும், தென்னை மரத்திலிருந்து இறக்குகிற பதனீரையும் இரண்டையும் குடித்துப் பார்த்தவர்கள் சொல்கிறார்கள், தென்னை மரத்திலிருந்து இறக்குகிற பதனீர் சுகமாகவும், ருசியாகவும், உடல் ஆரோக்கியத்திற்கு உகந்ததாகவும் இருக்கிறது என்று சொல்லப்படுகிறதே, மக்களுடைய நன்மையைக் கருதி, அப்படிக் குடிப்பவர்களுக்காக மட்டிலும் பதநீர் இறக்குவதற்கு அனுமதி கொடுக்கமுடியுமா ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, சொல்லக் கூறியதோ அல்லது சொந்த அனுபவமோ எனக்குத் தெரியாது. இப்போது அனுமதி வழங்குவதற்கில்லை.

திரு. கே. பி. எஸ். மணி : தலைவர் அவர்களே, சர்க்கார் உத்தரவு இருந்தும், தென்னம் பதநீரை இறக்கி, சீர்காழி தாலுகா பகுதிகளில் ரோடிலேயே வைத்து விற்கிறார்களே, அப்படிப்பட்டவர்கள் மீது அங்குள்ள அதிகாரிகள் தக்க நடவடிக்கை எடுத்திருக்கிறார்களா ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, இந்தக் கேள்வியை உறுப்பினர் அவர்கள் எழுப்பிய பிறகாவது அதிகாரிகள் தக்க நடவடிக்கை எடுப்பார்கள் என்று நினைக்கிறேன். அரசு இதைக் கவனத்தில் கொள்ளும்.

THIRU T. MARTIN : May I request the Hon. Minister to state whether the sale of 'Neera' is prohibited under the Act ? If it is not prohibited, what is the obstacle which is preventing the Government from selling the same through Co-operative Jaggery Societies in the City or some other place ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : இது வெல்லம் தயாரிக்கின்ற கூட்டுறவுச் சங்கங்களுக்கு சில நிபந்தனைகள் மீதுதான் இந்த உரிமங்கள் வழங்கப்பட்டிருக்கின்றன. ஆகவே, மதுவிலக்குத் திட்டம் அமலில் இருக்கும் நேரத்தில் வெகு ஜாக்கிரதையாக கையாளப்பட வேண்டுமென் பதால், வெல்லம் தயாரிக்கும் கூட்டுறவுச் சங்கங்களுக்கு மட்டும் வழங்கப்பட வேண்டும் என்கிற அளவில் அரசு முடிவு எடுத்திருக்கிறது.

திரு. மு. ச. சிவசாமி : பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது நீராவிலிருந்து வெல்லம் தயாரிப்பதற்கு மட்டும் அனுமதி வழங்கப்பட்டிருக்கிறது. அதோடு சர்க்கரை தயாரிப்பதற்கும் அனுமதி கொடுத்தால் உபயோகமாக இருக்கும் அல்லவா ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, அதுபற்றி யோசிக்கலாம்.

திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தஞ்சை மாவட்டத்தின் சில பகுதிகளில் தென்னையிலிருந்து பதனீர் இறக்குவதற்குப் பதிலாக கள் இறக்கப்படுவதாக அரசுக்குப் புகார் வந்திருக்கிறதா ? வந்திருந்தால் அரசு அது குறித்து எடுக்கப்பட்ட நடவடிக்கையினை அறிவிக்குமா ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, அரசுக்குப் புகார் வரவில்லை. அப்படிப்பட்ட நிலைமை இருந்தால், அதை மாண்புமிகு உறுப்பினர் தெரிவித்தால் உரிய நடவடிக்கை எடுத்துக் கொள்ளப்படும்.

அரசுத் துறைகளின் வருடாந்தர தணிக்கை

* 230 வினு—**திரு. சி. கோவிந்தராசன் :** மாண்புமிகு நிதி அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினுவிற்கு விடையளிப்பாரா :

அரசாங்கத்தின் பல்வேறு இலாக்காக்களில் வருடாந்தர தணிக்கை (Annual Audit) அந்தந்த இலாகாவைச் சேர்ந்த தணிக்கையாளர் செய்வதற்குப் பதிலாக மாநில அக்கௌண்டன்ட் ஜெனரல் அலுவலகத்தைச் சேர்ந்த தணிக்கையாளர்களைக் கொண்டு தணிக்கை செய்யும் முறையை அரசாங்கம் கொண்டுவரும் உத்தேசம் ஏதேனும் உண்டா ?

The Hon. Thiru K. A. MATHIALAGAN: By virtue of Article 149 of the Constitution read with paragraphs 11 (i) and 19 of the Government of India (Audit and Accounts) Order 1936, as adapted under the India (Provisional Constitution) Order, 1947, the Accountant-General, Madras is the statutory Auditor to conduct the annual audit of the various departments of the State Government. The question of appointing the Accountant-General, Madras as auditor for the various departments of the Government to conduct the annual audit does not therefore freshly arise now.

திரு. சி. கோவிந்தராசன் : அந்த அந்த இலாகாவைச் சேர்ந்த தணிக்கையாளர்களைக் கொண்டே ஆடிட் செய்வதனுல் பலவிதமான முறைகேடுகள் ஊழல்கள் இருக்கின்றன. ஆகவே, மாநில அக்கவுண்டெண்ட் ஜெனரல் அவர்களின் கீழேயே சில அதிகாரிகளைப் போட்டு ஆடிட் செய்ய அரசாங்கம் ஏற்பாடு செய்யுமா?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : மூலக் கேள்விக்கான விடையிலேயே நான் சொல்லியிருக்கிறேன். யார் எந்தக் கட்டத்தில் ஆடிட் செய்தாலும் இறுதியாக நம்முடைய கணக்கு எல்லாம் ஆடிட் செய்யப்படுவது அக்கவுண்டெண்ட் ஜெனரல் அவர்களால் தான். இப்போது இருக்கிற எக்சாமினர் ஆஃப் லோகல் பண்டு அக்கௌண்ட்ஸ் நம்முடைய அரசாங்க இலாக்காக்களைப் பரிசோதித்து வருகிருர். சிவில் சப்ளை இலாகாவுக்கு மட்டும் ஒரு தனி நிறுவனமே அதோடு சேர்ந்திருக்கிறது. ஏ.ஜி. ஆபீஸ்